

# நிலாவின் விடியல்

சிறீரஞ்சனி

STEM-KALVI CHARITY

Science | Technology | Engineering | Mathematics

3.1

STEM-Kalvi Charity



நிலா படுக்கையிலேயே இருந்தாள். வீட்டில் மற்றவர்கள் ஆரவாரப்படும் சத்தம் அவளுக்குக் கேட்டது. ஆனால், அவளுக்கு எழும்பப் பிடிக்கவில்லை. அவளின் உடல் கனத்தது. கண்களில் கண்ணீர் நிறைந்தது.



“தோசை சுடுகிறேன், எழும்பி வந்து சாப்பிடு,”
என குசினிக்குள் இருந்து அம்மா கூப்பிட்டார்.
நிலா பதில் எதுவும் சொல்லவில்லை.
போர்வைக்குள் மேலும் சுருண்டு கொண்டாள்.



.



தோசை என்றதும் துள்ளிக்கொண்டு ஓடிவருபவள் ஏன் எழும்பாமல் இருக்கிறாள் என்பது அம்மாவுக்கு விளங்கவில்லை. திரும்பவும் ஒரு முறை “நிலா, நிலா,” என அம்மா கூப்பிட்டார். அந்தச் சத்தம் கேட்ட அப்பா தன் அறையிலிருந்து வெளியே வந்தார்.



“நிலா, இன்று சனிக்கிழமை அல்லவா? சாப்பாட்டுக்குப் பின் எல்லோரும் கடற்கரைக்குப் போகலாம்,” என அப்பா நிலாவைக் கூப்பிட்டார். நீச்சலில் மிகுந்த விருப்பம் கொண்ட அவள் பேசாமல் படுத்திருந்தாள்.



“நிலா, உனக்குக் காய்ச்சலா?” என அவளின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள் அக்கா கீதா. நிலா மறுபக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டாள். அவளுக்குச் சத்தமாக அழவேண்டும் போலிருந்தது.



நிலாவுக்குப் பிடித்த பொம்மையைக் கொண்டுவந்து விளையாட்டுக் காட்டினான் தம்பி கீரன். நிலாவுக்குச் சிரிப்பு வரவில்லை. வேறென்ன செய்யலாமெனத் தம்பி யோசித்தான்.



அம்மா அருகில் வந்து நிலாவின் தலையைத் தடவிக்கொடுத்தார். “பிரச்சினை என்னவென்று சொல், நாங்கள் உதவி செய்யலாம்,” எனக் கனிவுடன் கூறினார் அப்பா.



நிலாவுக்கு யாருடனும் கதைக்கப் பிடிக்கவில்லை. தன்னுடைய உணர்ச்சிகளை எப்படிச் சொற்களில் சொல்வது என்றும் அவளுக்குத் தெரியவில்லை. அழுகை வருகிறது என்பது மட்டுமே தெரிந்தது.



நிலாவுக்கு ஏதோ ஒரு பிரச்சினை இருக்கிறது என்பது அம்மாவுக்கும் அப்பாவுக்கும் விளங்கியது. அதேவேளையில் அவளாகச் சொல்லும்வரை அவர்கள் காத்திருக்க வேண்டுமென்பதும் தெரிந்தது.



நிலாவுக்குப் பக்கத்தில் அம்மா போய்ப் படுத்துக்கொண்டார். அப்பா நிலாவின் மற்றப் பக்கத்தில் படுத்துக் கொண்டார். அம்மாவினதும் அப்பாவினதும் நெருக்கமும், உடல் சூடும் நிலாவுக்குச் சற்றுத் தெம்பைக் கொடுத்தன.



நிலாவுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அப்பாவும் அம்மாவும் நிலாவை இறுகக் கட்டிக்கொண்டார்கள். நிலாவின் மனம் சற்று இலேசானது. அவளின் உடல் பாரமும் கொஞ்சம் குறைந்தது. அம்மாவின் கைவிரல்களை நிலா இறுகப் பற்றிக் கொண்டாள்.



அம்மா நிலாவை கட்டிப்பிடித்துக் கொஞ்சினார். “அம்மா, ஒரு பாட்டுப் பாடுவீங்களா?” என நிலா கேட்டாள். “நிலா நிலா வா வா, நில்லாமல் ஓடி வா,” என அம்மா மென்மையாகப் பாடினார். நிலாவுக்குச் சிரிப்பு வந்தது. அவளின் குழப்பமும் கவலையும் குறைந்தன.



நிலா மெதுவாகப் போர்வையை அகற்றிவிட்டு
அப்பாவைப் பார்த்துச் சிரித்தாள். பின்னர்
அம்மாவின் மேல் தலைசாய்த்துப்
படுத்துக்கொண்டாள்.
அப்பா அவளின் முதுகை மெதுவாக
வருடிவிட்டார்.



“சரி, வாங்கோ, சாப்பிடுவோம்,” என்ற நிலா மெதுவாக எழும்பினாள். “ஓகே தோசை நேரம்” எனக் கூறிக்கொண்டு அம்மாவும் அப்பாவும் வேகமாக எழும்பினார்கள். பின்னர் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து மகிழ்ச்சியுடன் சாப்பிட்டார்கள்.

**Publisher:** STEM-Kalvi Charity
**Email**: STEMkalvi@gmail.com
**Web:** WWW.STEMkalvi.org
**Writer :** Sriranjani Vijenthira,
Toronto, Canada
**Book: Nilavin Vidiyal**
**(நிலாவின் விடியல்)**

**Language: Tamil**

**Reading Level**: **3.1**

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022

**Licence:** This license enables reusers to distribute, remix, adapt, and build upon the material in any medium or format, so long as attribution is given to the creator. The license allows for commercial use.



**About the writer :** Sriranjani writes short stories, essays and reviews, and bilingual children's books. Her short story collections have won the Godage and State Literary awards in Sri Lanka. She also works as a Tamil teacher at the Toronto District School Board. Her bilingual children's books are used as teaching materials across the Toronto region. Sriranjani received her Bachelor of Science from the University of Peradeniya and Master of Arts in Tamil Language & Literature from Annamalai University.

<table>
<tr><td>Sub Level</td><td>1.1</td><td>1.2</td><td>1.3</td><td>2.1</td><td>2.2</td><td>2.3</td><td>3.1</td><td>3.2</td><td>3.3</td><td>4.1</td><td>4.2</td><td>4.3</td><td>5.1</td><td>5.2</td><td>5.3</td><td>6.1</td><td>6.2</td><td>6.3</td></tr>
<tr><td>Main Level</td><td colspan="3">1</td><td colspan="3">2</td><td colspan="3">3</td><td colspan="3">4</td><td colspan="3">5</td><td colspan="3">6</td></tr>
</table>

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics